[1973 நவம்பர் 24

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, கிராமச் சாலைகளில் இருக்கிற சில சாலைகளைத்தான் நான் கூறுகின்றேன், மறுபடியும் வற்புறுத்துகின்றேன். என்னுடைய தொகுதியிலே பல சாலைகள் கிராமத்தைச் சேர்ந்தவைகள், சில ஹைவேஸைச் சேர்ந்திருக்கின்றன. அந்தக் காரணத்தினால் பஞ்சாயத்து யூனியன் திட்டமிட இயலாத நிலை இருக்கிறது. அதற்கு அரசு என்ன செய்யப்போகிறது என்பதற்கு கனம் அமைச்சர் அவர்களிடத்திலே இருந்து பதில் வேண்டும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே திருவரங்கம் தொகுதியிலே இருப்பதைப் பற்றிக் கூறுகிறார்கள் என்று கருதுகிறேன். அந்தத் தொகுதி பூராவும் எனக்கு நன்றாகத் தெரியும். அங்கே ஒரு பர்லாங், 2 பர்லாங் சாலைகள் ஹைவேஸுக்குச் சொந்தமாக இருக்கின்றனவே தவிர, முழுச் சாலைகள் இல்லை. அப்படிப்பட்ட சாலைகள் இந்த வருஷம் எடுத்துக்கொள்ளப்பட்டு, வேலை முடிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடுத்த முறை அங்கு சென்று பார்ப்பார்களானால், அவர்களுக்குத் தெரியும்.

* 382 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் தார்ச்சாலை ஆக்கும் சானுபுத்தூர்-மாதர்பாக்கம் (பொன்னேரி வட்டம்) சாலையை சானுபுத்தூர் கிராமம் வரை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாதர்பாக்கத்திலிருந்து சானுப்புத்தூர் வரை உள்ள சாலையை மேம்படுத்தும் வேலை 1972-73-ல் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வேலை 1974-ம் வருடம் மார்ச்சு மாதம் முடிக்கப்பெறும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அந்தச் சாலைகள் என் இந்தக் கிராமம் வரைக்கும் நீட்டிக்கப்படவில்லை என்பது தான் என்னுடைய மூலக் கேள்வி. அதனால்தான் அந்தக் கேள்வியே எழுந்தது. அதற்கான விடையை எதிர்பார்க்கிறேன்.

1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இப்பொழுதிருக்கிற சாலை அதிலே சேர்க்கப்படவில்லை. மாதர் பாக்கத்திலிருந்து சாணுப்புத்தூர் வரை 4 கிலோமீட்டர்தான் இதிலே இணைக்கப்பட்டிருக்கிறது. மீதி இணைக்கப்படவில்லை.

*** 383 வினு—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஓபசமுத்திரம் கிராமம் 1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருப்பதால், இக்கிராமத்தை தார்ச் சாலையுடன் இணைக்கும் கிராமப்புறச் சாலைத் திட்டம் மேலும் காலதாமதப்படுவது ஏன் ?

(இ) இது எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) சிறப்பு கிராமப் புறச் சாலைத் திட்டத்தின் கீழ் 1,500-க்கு குறையாமல் மக்கட் தொகையுள்ள கிராமங்களுக்கு தார்ச்சாலையுடன் இணைக்கும் சாலை வேலைகள் மேற்கொள்ளப்படும். 1971 மக்கட்தொகை கணக்கின்படி ஓபசமுத்திரம் கிராமத்தின் மக்கட்தொகை 605. ஆகவே இத்திட்டத்தின்கீழ் இந்தக் கிராமத்திற்கு சாலை வசதி செய்ய இயலாது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்தையும், அரிசனக் காலனியையும் சேர்த்து 1,500 மக்கள் தொகை இருக்கிற காரணத்தினுல், அதுவும் எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அதைத்தான் முதலிலே சொன்னேன். 1971-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, அங்கு மக்கள் தொகை 605. அந்த ஓபசமுத்திரம் கிராமத்தில் மக்கட்தொகை 125 தான். அதில் காரக்கோட்டுக்குப்பம், முன்சிங் நகரமும் அடங்கியிருக்கிறது. அந்த மூன்றையும் இணைத்துத்தான் 605 என்று சொன்னேன்.